
Q22:38·211 AK
N14
188/36

OFFICE OF THE REGI... BOOKS
REGIST...
10 JUL 1914
MADRAS.

Q22:28 · 211AK
N14
186186



உ

ஸ்ரீராமஜெயம்.

தென்திருப்பதியென்கிற

# அரியக்குடி ஸ்ரீநிவாசப்பெருமாள்

நூதன வர்ணமெட்டு

## கீர்த்தனை.

---

இஃது

செஞ்சை அமராவதிநாட்டைச் சேர்ந்த

கீரணிப்பட்டி

**சி. மு. ராக்கப்ப அம்பலகாரரால்**

இயற்றப்பட்டு

---

தேவகோட்டை எஸ்டேட் பிரஸில்

அச்சிடப்பட்டது.

1914.

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 10 JUL 1914 MADRAS.

138/1914

ஸ்ரீராமஜெயம்.

# தென்திருப்பதியென்கிற
# அரியக்குடி ஸ்ரீநிவாசப்பெருமாள் நூதன வர்ணமெட்டு
# கீர்த்தனை.

---

## விநாயகர் துதி வெண்பா.

திருவருள் புரியுந் தென்திருப் பதியின் சீர் புகல
தருவர் பாலா பாக்கிய பதவியுமே—ஒருமனமாய்
அந்தி பகலும் பணிய அருள்புரிவாய்
தந்திமுக விநாயகனே சரணங்காப்பு.

022:38.21:N1C
A114

## ஸ்ரீநிவாசர் ஸ்தோத்திரம்.

ஸ்ரீநிவாசனே ஹரி மானிலத்தோர் புகழும்
திருவேங்கிடேசநாதனே பொற்பாதனே
திருவேங்கிடேசநாதனே (1)

தென்திருப் பதியாக வந்தவா வுந்தன் பாதந்
தினந்தினம் போற்றி செய்தேனே ஸ்ரீநிவாசனே
தினந்தினம் போற்றி செய்தேனே (2)

வைகுந்த வாசரான மெய்கண்ட சோதியே
வருவாய் கருடனேறியே இந்தச்சாரியே
வருவாய் கருடனேறியே (3)

துளப மலரணியும் உலகமளந்த வுன்பாதந்
துதிக்க வரமருளுமே யெனையாளுமே
துதிக்க வரமருளுமே (4)

சித்தாதி தேவர்தொழும் பத்தவதாரமான
சிங்கார ஸ்ரீநிவாசனே வாசுதேவனே
சிங்கார ஸ்ரீநிவாசனே (5)

அரியக்குடி நகரில் பிரியத்துடனே வாழும்
அலமேலு மங்கைபாகனே ரங்கநாத...
அலமேலு மங்கைபாகனே

தன்னையா ளடியை என்னாளுமே பணிய
கருமவினைகள் தீருமே துணையாகுமே
கருமவினைகள் தீருமே (7)

இருமை லாக்கே யடிமை உரிமையுடனே செய்ய
ஜென்மம் பிறப்பதில்லையே கருக்கொல்லையில்
ஜென்மம் பிறப்பதில்லையே (8)

நாராயண மந்திரம் பாராயணமே செய்ய
நாலாம் பதவியாகுமே வினைபோகுமே
நாலாம் பதவியாகுமே (9)

பாகவத ராமநாதா பாகவதர்களான
ராக்கப்ப தாசனுக்காருமே வரந்தாருமே
ராக்கப்ப தாசனுக்காருமே (10)

(வேறு மெட்டு)

ஸ்ரீனிவாசகருங் கருட பேணிக் திருவடியை
பூணிப்பாராத கண்கள் வீண் வீண் வீண்
சித்தமதுவே நித்தியந்தினம்
நத்தியேமனம் பக்தியாக
சிந்தையி லெப்பொழுதும் சந்தோஷமாகவே
அந்தரங்கத்தில் வை வை வை (1)

கோவிந்தன் கோவிலுக்கு மேவி நடவாத
பாவியுட கால்கள் பாழ் பாழ் பாழ்
கொரியே மனந் தேறி உறுதியாய்
யெதிவாசியில் பாரிமா மலர்
கொண்டுபோய் நித்தமும் கண்டு மனமகிழ்ந்து
நின்று தெரிசித்தால் முத்தி முத்தி முத்தி (2)

அரியின் அடிமலரைப் பிரியத்துடனே நிதந்
தெரிசிக்காத பேர்கள் மட்டி மட்டி மட்டி
அழுத்தியே மனஞ் செலுத்தி யன்பொடு
விசித்த திருவடி யிழுத்து மடிபிடி
ஆதிமூலப் பொருளை நீதி வழுவாமல்
ஓதித் தொழுமேவோர்கள் கெட்டி கெட்டி கெட்டி (3)

... ஒன்றும் பதம் ஏக பராபரம்

பாகவதர்களுடன் சேர் சேர் சேர்
சத்தியத்துடன் நித்தியப்படி
புத்தி வைத்தொரு முத்தியும்பெற
சாரங்கபாணியுட யிரு கால்களையும்
நேராய் நினைந்ததைப் பார் பார் பார் (4)

வேத ஹரிபஜனைக் காதாரக் கேளாத
மூ[illegible]விப் பயல்களும் மூடர் மூடர் மூடர்
வெங்கிடகிரியில் தங்கி யாறுநாள்
மங்களமர்கமேவு ரங்கசைப்பணி
விஷகடி குஷ்டங்களும் நசலான மேகரோகம்
பசமல ரோகங்களும் போகும் போகும் போகும் (5)

கோவிந்தன் திருப்புகழ் மேவியனுதினமும்
நாவினாற் புகழாதார் ஊமை ஊமை ஊமை
கொடுத்து நினைவைப் படித்துப் பஜனைகள்
அடுத்து நெறுங்கியே பிடித்து உறுதியாய்
கும்பிட்டு யெப்பொழுதும் நம்பினபேர்களுக்குத்
துன்ப யெமவாதையும் இல்லை இல்லை இல்லை (6)

அஷ்டாக்ஷரத்தோனே இஷ்டமாய்ச் சேவித்து
பட்டாபிராமன் துதி பண் பண் பண்
ஆதிமூலச் சோதியின் திருவடி
நீதிவழுவாமல் ஓதியனுதினம்
ஹரி ஹரி யென்றுமே பிரியத்துடனே துதி
சரியாக நாவினாற் சொல் சொல் சொல் (7)

மாதவா கோவிந்தா சீதாமுகுந்தனே
ஆதரவு சொல்ல வாரும் வாரும் வாரும்
மயங்கியே மனந் தியங்கித் தவியாமல்
பயங்காம் போக ஜெயமருள் தந்துமே
மாடிடையோர் புகழும் ராமாநீ யெந்தனையும்
ஸ்ரீமத் திருவடியில் சேரும் சேரும் சேரும் (8)

ஸ்ரீரங்க ஸ்தலத்திற்போய் நேராய்த் திருவடியை
பாரார்த்தபேர்களெல்லாம் பாவி பாவி பாவி
சென்று அவ்விடம் கண்டு சி[illegible]

நின்று அசையாமல் தொண்டு செய்துமே
சித்தத்தை யெப்பொழுதும் சுத்தப்படுத்தியே
அத்தனருள் பெறுங்கள் மேவி மேவி மேவி (9)

ராஜகோபாலனை கேச வைகுந்தவா
தாசனைத் திரு கண்ணினால் பாரும் பாரும் பாரும்
ரத்தினவொளிமின்ன சுத்தியுங் கல கல
வெத்தியுங் கொடியா முத்தியுமருள் தர
ராக்கப்ப தாசனை மார்க்கத்துடனே நிதங்
கார்க்கக் கருடனேறி வாரும் வாரும் வாரும் (10)

வேறு மெட்டு.

ஸ்ரீனிவாச நாத நாத நாத நாத பூதா
நான்மறை வேதா யெந்தன்மீதில் வாதா
வுந்தனருள் தாதா
தேவாதி தேவர்போற்ற மூவரு மலர்கள் சாற்ற
யாவரும் புகழ்ந்து வாழ்த்த நாவலர் அரங்கமேற்ற
தென் திருப் பதிதனக்கு வந்தமாயவா (1)

பஞ்சவர்கள் போற்றிசெய்த பாலகிருஷ்ண லோலோ
அசோதையம்மன் பாலா
சோதிக்கின்ற லீலா அமரர்க்கனுகூலர்
பாற்கடல் வாசா சரணம் கார்க்கநீ யிதுவேதருணம்
பார்க்காது யேதுகாரணம் ஆர்க்கின்ற பிர்மகாரண
பக்ஷம்வைத்துப் பாலனைக்கார் மச்சவதாரா (2)

முதலைபிடிக்கக் கசேந்திரன் மூலமென்ற ஆதியே
முன்னேவந்த சோதியே வெற்றிச்சங்க மூதியே
மோக்ஷங் கொடுத்த நீதியே
முனிவர்கள் ரிஷிகள்கண்டு கனிவுள்ள தெய்வமென்று
இனியிவர்க் கடிமையென்று பணியவே யருகில்நின்று
முதலையைச்சம் மாரஞ்செய்து மதகரியைக் காதவா (3)

வானுலகத்தோர்கள் போற்றும் வைகுந்த வாசா
வரதவெங்கிடேசா சேஷசீனிவாசா
யெங்கும் பிரகாசா
... மெங்கும் நின்றாய் தய்யதென் பதிக்குச்சென்றாய்

மெய்யா அரிநகரைக்கண்டாய் தெய்வமா யதிலே நின்றாய்
வந்தன மிகவுந் தந்தேன் யெந்தனைக் காரும் (4)

அண்டமெலா முண்டுமிழ்ந்த ஆதிரங்கநாதா
வேதவி நோதா உலகளந்த பாதா பரப்ரம்ம நீதா
அரியென்று பேருங்கொண்டாய் கரிதனைக் காத்துநின்றாய்
விரிகடல்தனில் துயின்றாய்
உரியேறி வெண்ணை தின்றாய்
அன்னை தந்தை குருவுநீயென் றுன்னை நம்பினேன் (5)

திருமாலுக் கடிமையென்று சிந்தையெண்ணங் கொண்டேன்
சீனிவாச ரென்றேன் திருவடியைக் கண்டேன்
அருகில்வந்து நின்றேன்
திருவருள் புரிவாய் சித்தம் குருவாய்நீ வருவாய்-நித்தம்
வருதுபா ரடிமை சத்தம் தருவாய் நீ பதவிதெத்தம்
தீராவினை பாவங்களும் வாராமல் செய்குவாய் (6)

ராமநாத மூர்த்தியென்று நானும் பஜனை பாட
அடியாருடனேகூட திருவடியைத்தேட பாவப்பறந்தோட
ரக்ஷகாகருட னேறும் தெக்ஷிணதிருப் பதியேவாரும்
பக்ஷமாய் முகத்தைப் பாரும்
மிச்சமாய் வரத்தைத் தாரும்
ராக்கப்ப தாசனையும் கார்க்க அன்புடன் (7)

காவடிச்சிந்து வர்ணமெட்டு.

சீனிவாசனே சீனிவாசனே காணவே யென்கண்கள்
தேடுதே பஜனை பாடுதே மனம் நாடுதே சென்று கூடுதே அவர்
சித்தந் திரும்பவே நித்தந் திருவடி
சேவிப்போம் நன்றாய்ச் சேவிப்போம் (1)

சேவித்த பேர்க்கெல்லாம் சேவித்த பேர்க்கெல்லாம் ஆவி பதவிகள்
சேருமே பிணி தீருமே புண் ஆறுமே குட்டயாறுமே உங்கள்
சிந்தைக்குள் சொந்தமாய் அந்தரங்கத்திலே
தேடுங்கள் அவரை நாடுங்கள் (2)

அலமேல் மணாளனை அலமேல் மணாளனைக் கண்டு தெரிசிக்க
அடுப்போம் துணைபிடிப்போம் வினைவிடுப்போம் தவமுடிப்போம்

ஆதிமூலப் பொருள் சோதியி னருள்பெற
அண்டினேம் கிட்ட அண்டினேம் (3)

நாராயணா ஹரி நாராயணா ஹரி ராமா ரெகுபதி நாதா
நாலுவேதா ஞானபோதா வரந்தாதா
நானுமுன் திருவடி வேணுமென்றே தினம்
நம்பினேன் உன்னை நம்பினேன் (4)

சிதைமணாளனே சிதைமணாளனே மாதவா கோவிந்தா
சேஷனே சீனிவாசனே ஜெகதீசனே சொர்க்கவாசனே உந்தன்
சித்த மிரங்கியே நித்தங் கடைக்கண்ணால்
பாருமே யென்னைக் காருமே (5)

ரங்கநாதராக ரங்கநாதராக எங்குமருள்பெற்ற ராமா
ஹரிராமா பரந்தாமா ஆயிரம் நாமா
ராக்கப்ப தாசனைக் காக்கவுன் திருவடி
நாடினேன் பதம் பாடினேன் (5)

வேறுமெட்டு. பல்லவி.

ஹரி ஹரி வா வா வா வரமெனக்குத் தா தா தா
வந்தென்னைக் கார் கார் கார் (ஹரி)

அனுபல்லவி.

வர வர வரத் தா தர தர சர சர வென்று முர ஹரி ஹரி (ஹரி)

சரணம்.

அரி அரி ஆதியே ஆதிபரஞ் சோதியே அருள்தரு நீதியே
ஐயா துய்யா மெய்யா வாவா
அருளமுதா குருவாயென் முன் (அரி) (1)

தேவ தேவ தேவனே திருமலைக் காவனே
அடிமைக ளாவேனே
சித்தியும் பத்திகள் முத்தியுந் தந்திட
சீனிவாச குருவா யென்முன் (அரி) (3)

வாவா வாசனே யெங்கும் பிரகாசனே
மாயவுல் லாசனே
வாதுகள் சூதுகள் கோது வாரமலே
தேவ குருவ யென்முன் (அரி) (3)

கோ கோ கோவிந்தா உலகத்தோர் சேவிந்தா
உந்தியில் மேவிந்தா
குற்றங்க ளொத்தனை மெத்தவே செய்யினுங்
குறைகள் தீர்க்க குருவாய் என்முன் (அரி) (4)

ஆ ஆ ஆயனே வெண்ணெயுண்ட வாயனே
அடியார்கள் நேயனே
அஞ்சு பஞ்சுங்க ளரியக் கெஞ்சி
அழைத்தேன் குரு வருக யென்முன் (அரி) (5)

கார் கார் கார்மேகா அர்ச்சுனன் தேர்ப்பாகா
தனுஸ்கர சரவேகா
கத்தியே நித்தியம் சுத்தி யலையாமல்
காரணகுரு வாகயென்முன் (அரி) (6)

மா மா மாயனே யென்னுடல் கூயனே
மோக்ஷ சகாயனே
மனதுடன் குணமாய் கன திருவடி தர
மந்திர சுந்தர குருவா யென்முன் (அரி) (7)

நமோ நமோ நாரணனே சர்வாதி காரணனே
எங்கும் பரிபூரணனே
நாதபூத வேதா வாவா
நாடி தேடி குருவாயென் முன் (அரி) (8)

தா தா தந்திரனே ராமச் சந்திரனே
ஞான சுந்தரனே
தருமசிந்தனை பொறுமை தந்திட
அருமை குரு வாகயென்முன் (அரி) (9)

ரா ரா ராமனே ஆயிர நாமனே
எங்கும் பரந் தாமனே
ராக்கப்ப தாசனைக் கார்க்கக்
கண்ணால் பார்க்க யென்முன் (அரி) (10)

வேறுமெட்டு. பல்லவி.

Q22,38:2M1L N14

வருவாய் கருடனேறியே வைகுந்த வாசா (வ...)

அநுபல்லவி.

வருவாய் கருடனேறி மாயவனே அரி
குருவாய் உபதேசம் தருவாய் தயாபரனே (வரு)

வருந்தல் முடுகு.

அருமறை வேதியர் வேத மோதவே
அண்ட மெண்டிசை நின்று குலுங்கவே
அந்திர துந்துமி வந்து முழங்கிட
சுந்தர மால்முக மங்குந் துலங்கவே (வரு) (1)

வெண்சாமரைகள் வீச்சிருபுரம்
வெத்திக்கொடிகளும் சுத்திப் பறந்திட
வெண்கலமுரசுக ளெங்குமுழங்கவே
மங்களவாத்திய மட மட வென்றிட (வரு) (2)

ரம்பையூர்வசி நடன மாடவே
நட்டுவத்துடன் பிட்டில் வாத்தியம்
ரத்தின மகர தோரண மின்னவே
சுற்றிலுந் தாசர் கூட்டஞ்சூழவே (வரு) (3)

நாகசன மொடு மேளவாத்தியம்
நாரதமாமுனி பஜனைகள் பாடவே
நாகரீகதம் புருவீணையும்
யேகமண்டல நகாரவோசையும் (வரு) (4)

கண்டாமணிகள் கலீர் கலீரென
கைமணி ஓசைகள் கிணீர் கிணீரென
கட்டிய மிருபுரமும் சூழவே
மட்டிலாப் புகழ்படைத்த மாயமாய் (வரு) (5)

முகவீணையோடு புல்லாங் குழலும்
மோகனமாகிய அருமை வீணையும்
மோர்ச்சங்குடன் கின்னரி முழங்கவே
தக தகவென்று தங்கமின்னவே (வரு) (6)

ஆலவட்டம் சுருட்டி குடைகளும்
அருத்தமாய்ப் படிக்கும் போனகிராப்பும்
யானை குதிரையின் டம்பானங்களும்
சேனை காவலர் யாவருஞ் சூழவே (வரு) (7)

பியாண்டுவாத்தியம் பரமேளங்களும்
பம் பம்மென் றாதும் வெற்றிச் சங்குகள்
பச்சை மரகத மேனிதுலங்கவே
லெக்ஷம்பேர்கள் நாவலர் பாடவே (வரு) (8)

தேவர்கள் பூ மாரி பெய்யவே
தேசத்தார்கள் கையெடுக்கவே
தீர்க்கமுடனே சித்தம் மிறங்கியே
ராக்கப்பதாசனைக் காக்கவரந்தா (வரு) (9)

வேறு மெட்டு. பல்லவி.

அரி அரி அரி ராம் அரி அரி அரி ராம்
அரி அரி அரி அரி அரி அரி அரி அரி அரி ராம் ராம் ராம்

ஸ்தோத்திரம்.

அரிமாநகரி லருள்புரியும் அரியே சீனிவாசா
அடியார்க்கருள் நேசா
அனுதினமும் உனைப் பணிந்தேன்
அடியேன் முகம் பார் பார் பார் (அரி) (1)

தென்திருப் பதிதனிலே வந்துமேவும் நாதா
திவ்விய பொற் பாதா
தேடி நாடி போற்றிசெய்தேன்
திருவடியுந் தா தா (அரி) (2)

சீனிவாச நாதர் தன்னை சிந்தைவைத்துத் தேடினேன்
தினமும் பஜனை பாடினேன்
சிறுவன் முகம் பார்ப்பதற்கு
சீக்கிறமாய் வா வா (அரி) (3)

உந்தனைவிட வெனக்கு வுண்டோயினி யாரும்
உகந்துமுகம் பாரும்
உத்தமனே சித்தம் வைத்து
உறுதியுடன் தாருமே (அரி) (4)

பார்த்தோர் பழிக்கவென்னை பாவியாகச் சேர்யாதே
பாதவிக்க ...வை...

தமிழ்நாடு ஆவணக் காப்பக

பாவமதைத் தானகற்றிப்
பக்தன்முகம் பார் பார் (அரி) (5)

குற்றமதுக ளொத்தனைநான் கோடிபிழைகள் செய்தாலும்
கோபமாக வைதாலும்
கொண்டு மனம் பொருத்தென்னை
கோவிந்தனே கார் கார் (அரி) (6)

பாரிலுள்ள சீவர்க்கெல்லாம் படியளக்கும் பரமனே
பானுகார்க்குந் தருமனே
பக்ஷம்வைத்து இச்சமயம்
பாவந் தீர்க்க வா வா (அரி) (7)

அறிந்தறியாமற் செய்தாலு மன்புவைத்துக் காரும்
அடிமை முகம் பாரும்
ஆதிநா ராயணரே
அடியாருடன் சேர் சேர் (அரி) (8)

முத்தி யளிக்கும் பரமபத
மூலமென்ற மூர்த்தியே
மூன்றுலோகக் கீர்த்தியே
முத்தொழிலும் நடத்துகின்ற முச்சுடரே ராம் ராம் (அரி) (9)

நாராயணா ராமா ஹரி
நாத பூத கீதா நான்மறை வேதா
ராக்கப்ப தாசனுக்கு
நல்லவரந் தா தா (அரி) (10)

வேறு மெட்டு (சிந்து)

தேனார் தனில் தீர்த்தமாடும் வானோர்புக ழானநாதன்
சீனிவாசன் திருவடியைப் போற்றினேன். நல்ல
தென்திருப்பதி யென்றாங் கேற்றினேன் (1)

தெக்ஷிண திருப்பதியா யிக்ஷணத்திலே விளங்கும்
தென்திருப்பதி வாழ் சீனிவாசன் நல்ல
[illegible]லக்ஷ்மி மகிழ் உல்லாசன். (2)

அரியக்குடி நகரந்தனிற் பிரியத்துட னருள்புரியும்
ஆதிரங்க நாதரிவர் தானே இந்த
அதிசயத்தை சொல்லிவாரேன் நானே (3)

சீனிவாசர் திருவடியை பேணிப் பேணித் தான்பணிந்தால்
தீராவினை பாவங்களுந் தீருமே பொல்லா
செங்குட்டங் கருங்குட்டங்கள் மாறுமே (4)

தென்றிருப் பதிதனிலே வந்துமேவிப் போற்றி செய்தால்
திருவடியிற் சேர்பலனைக் கொடுக்குமே மறு
ஜென்மப் பிறப்பில்லாமல் தடுக்குமே (5)

புத்திரனில்லாத பேர்கள் பக்தியுடனே பணிந்தால்
பிள்ளைகள் குறைவிலாமற் பிறக்குமே பசுவும்
நித்தமுங் குறுணிப்பாலைக் கரக்குமே (6)

பணங் காசு வேண்டும்பேர்கள் தினந் தினம வந்தேபணிந்தால்
பாக்கியங் குறைவிலாமல் தருவாரே நமது
கூடத்துணையாக யெங்கும் வருவாரே (7)

முத்திவேண்டும் பேர்களெல்லாம் சுத்தியிவ ரைப்பணிந்தால்
மோக்ஷமேலாம் பதவிதனிற் சேர்க்குமே காய
முழுதுங் கடைத்தேறக் கண் பார்க்குமே (8)

கேசவ னவதாரத்தை நேசமாய்ப் பஜனைசெய்தால்
கேட்ட கேட்ட வரங்களெல்லாங் கொடுக்குமே இனி
சேவல மில்லாதபே ரெடுக்குமே (9)

ராத்திரிபக லனுதினமு மன மேற்றித் துதிசெய்திடும்
ராக்கப்பதாசன் முகததைப் பார்த்தவர் எப்
போதுங் குறைவிலாமல் கார்த்தவர் (10)

வேறு மெட்டு (பல்லவி)

சீனிவாசா இன்னங் கோபமா சீனிவாசா இன்னங் கோபமா

அனுபல்லவி.

சீனிவாசர் வுந்தன் சித்தமிரங்கா

மானிலத்தோர் புகழ் வைகுந்தவாசனே (சீனி)

சரணம்

தீராவினைகள் தீர்க்கும் ஓராயிர நாமா
திருவரங்கேசனை கருணாகர நீதா
தேடித் திருவடி காண நாடிப் பஜனைகள் பாடித்
திருத்தி மனதை நிறுத்தி கருத்தில் வைத்துப் பணிய (சீனி) (1)

ஆயர் குலத் துதித்த காயாம்பு நீலமேகா
அந்தணர் போற்றிய சுந்தர நாதா
அச்சுதானந்தஸ்வரூபா மச்சாவதாரா வா வா
அய்யா அருள் தருமெய்யா வையம் புகழுந் துய்யா (சீனி) (2)

வாரண மூலமென்ற காரண ஸ்வரூபியே
வாசுதேவா வென்று தாசனுனைப் பணிந்தேன்
வாமன ஸ்வரூபா வா வா நேம நிஷ்டைகள் தா தா
வந்தன மிகவுந் தந்தேன் எந்தனையாளும் வந்தே (சீனி) (3)

அலமேலுமங்கை பாகா உலகமளந்த பாதா
ஆதி நாராயணா சோதியின் திருவடி
அரி அரி யென்னுந்தனை சரியாய்த் துதிகள் செய்ய
அன்பொடு இன்பந்தந்துன் பாதமருவிற்சேரும் (சீனி) (4)

ஸ்ரீதரனே முகுந்தா மாதவா கோவிந்தா
சித்தமது இரங்கி நித்தமெந்தனைக் காக்க
சிந்தையிலுன் றனை நினைந்து வந்தனந் தந்தேனிங்கு
சித்தம்வைத் தருள்புரியும் நித்தந்துதிகள் செய்ய (சீனி) (5)

ரங்கநாதராக யெங்கும் புகழ்பெற்ற
ராஜகோபாலனே கேசவ வைகுந்தவா
ராமனே ராமா வா வா க்ஷேமத் திருவடி தா தா
ராக்கப்பதாசனைக் காக்க பார்க்க பலவினை தீர்க்க (சீனி) (6)

வேறு மெட்டு (பல்லவி)

சகஸ்திர நாமா நான் சஞ்சலப்படலாமா (சக)

அனுபல்லவி.

சகஸ்திரநாமா வுன் வசத்தினிற் சேராமல்
[illegible]சிருந்து நான் கஷ்டப்படலாமா (சக)

கண்ணிகள்

அவதார ரூபர் அடியேனேக் காப்பாய்
கபடநாடக மாயா காப்பதரிதோ வென்னே
யெவராவது வந்து இடுக்கங்கள் செய்தாலும்
தவராம லென்தனே தற்காத்தருள் செய்வாய் (சக) (1)

கோவிந்த மாதவா கோபால கேசவா
மேவியுந்தன் பாதம் விரும்பியுன் தடுத்தேனே
பாவியென் றென்னேப் பழிக்கநீ செய்யாமல்
ஆவியகலு முன்னே அடியேனேக் காரும் (சக) (2)

ஆவது மழிவது முனேயல்லால் வேறுண்டோ
தேவரிடுக்கந் தீர்த்த தேவாதி தேவனே
மூவரும் நீதானே முத்தொழில் செய்கின்றாய்
பாவம் வராமற் காக்க பாசமோ வுந்தனுக்கு (சக) (3)

உல்லாசமாகவே உடலுயிராய் நின்றாய்
எல்லாவுயிர்களுக்கும் இறையவன் நீதானே
பொல்லாத சேயெனில் தாய்தள்ள லாகுமோ
கல்லாதவன் பிழையைக் காப்பதுன் கடமை (சக) (4)

எந்நாளு முந்தன் பாதம் இருகரத்தாலும் சேவித்தேன்
கண்ணுங் கருத்துந் தந்து காத்து ரக்ஷியு மென்னே
முன்னே யனேகருக்கு முத்திகொடுத் ததைப்போல
வன்னக் கருடனேறி வருவாய் நீ யெந்தன் முன்னே (சக) (5)

ஏழை வருந்துவது மிரங்காதோ வுன்மனது
வாலை சகோதரனே மாயவா ஹரி ராமா
நாளைவருங் காரியம் நாதாநா னறியேனே
வேளையிது சமயம் விசனத்தைத் தீருமையா (சக) (6)

மாயவதாரமான வரத வெங்கிடேசனே
ஓயாமல் கூப்பிட்டால் உன்காதில் கேளாதோ
ஆயர்குலத் துதித்த ஆதிநா ராயணா
காயாம்பு நீலமேகா காருமெந்தனே வந்து (சக) (7)

எங்கெங்கு மருளான யேக பராபரனே
சங்கு சக்கரங் கையில் தரித்த தயாநிதியே

பொங்கவே பாலதுவும் பூரணமாக வந்து
தங்கியென் னுவிலே சத்தியம் நிலைநிற்க (சக) (8)

சிந்தையில் குடிகொண்ட சீனிவாசனே ஹரி
இந்தஜென்மம் போனால் இனியென்ன லாகுமோ
உந்தன் மலரடியை உண்மையாயெண்ணினேன்
வந்தென்னையாளுமே வஞ்சகஞ் செய்யாமல் (சக) (9)

கார்க்க மன திரங்கி கருடனேறியே வந்து
வாக்கு வரந்தருவாய் மலரடி பூசிக்க
மூர்க்கன் கிடாவிலேறி மூடிகிவரு முன்னே
ராக்கப்பதாசனைக் கார்க்கக் கடனுனக்கு (சக) (10)

முற்றிற்று.

தமிழ்நாடு அரசுக் காப்பக நூலகம்
186136
சென்னை-600 008

# சாற்றுக்கவிதை.

துன்னூர் வித்வான்

## பெரியவீடு ஸ்ரீ குமாரசுவாமி முதலியாரவர்கள், இயற்றியது.

உருவண்ணா றணிபரமா வுலகமெலாம் பெற்றுவக்கும்
உமையாடன்னை
மருவண்ணா லருள்செயன வாழ்த்தும் வல்லோ னாறுமுக
வாணன் சென்மக்
கருவண்ணா வகையிதுவே யெனக்கருதி மெய்யன்பால்
கவின் கொண்டோங்குந்
திருவண்ணாமலையரி தோத்திரச் சந்தச் சிந்தெனு நூல்
செப்பினானால்.

---

## வெண்பா.

இச்சிந்தினை நன்காய்ந்தே கற்றோரே வரும்பூ
மெச்சிந்திரனென்ன மேன்மையுற்றின்—பச்சிந்தில்
மூழ்கிக் களித்தருட்சீர் முற்றும்பெற் றிவ்வுலகில்
வாழ்வார் சந்தேகமில்லாமல்.

---

## நூலாசிரியர் பிதா இயற்றிய வெண்பா.

தெள்ளுதமிழ் நாவலருட் செய்கடமைதப்பாத
வள்ளுவர் நூல் வாழ்த்திரண்டின் வாக்கதனை—யுள்ளாய்ந்து
கூறிச் சந்தப்பாவால் கோபாலன் றுடொழுதான்
ஆறுமுக மென்குமரனாம்.

8A
4-102